


பாமாலை 313 மா பெரிதாம் நின் கிருபை

1 மா பெரிதாம் நின் கிருபை
சாவரை மறவேனே;
மாதாவின் கர்ப்பத்திருந்தே
மா தயவாய் என்னையே
அழைத்தீரே,
மா தவம் நான் செய்தேனோ?

2 அந்தகாரத்தால் நிறைந்து
சொஸ்தமின்றி வாழ்ந்தேனே
தந்து உம்மைச் சொந்தமாக
என்தனை நீர் மீட்டீரே;
நாதா உம்மை
என்றும் நான் துதிப்பேனே

3 நான் நினைத்த பாதை வழி
தேன் கசியும் பக்கமே
செல்ல எத்தனித்தபோது
அல்லவென்று தடுத்தே
ஆட்கொண்டீரே
ஆண்டாண்டும்மைப் போற்றுவேன்

4 ஊழியத்தை உண்மையுடன்
வாழ் நாளெல்லாம் செய்யவும்
நீடும் கிருபை சூடியென்னை
வீடு சேரும் வரையும்
பலவீனம்
தாங்கி தயை செய்வீர்